**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 50/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 15.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாய் வித்யா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செங்கல்ராயன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது புத்துரில் வசித்து வருகிறேன். இதற்கு முன் என் அப்பாவுடன் இருந்தேன். பள்ளிப்பட்டில் உள்ள கரலம்பாக்கத்தில் வசித்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் அப்பாவின் முதல் மனைவியின் மகன் ஆவார். 01.05.2019 இரவு 11.30 மணிக்கு நான், என் அம்மா, எனது அண்ணன் என் வீட்டு மாடியில் துங்கி கொண்டிருந்தோம், வீட்டிற்கு கீழ் எனது அப்பா தெருவில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தார். என் அப்பா கத்துகின்ற சத்தம் கேட்டது. நாங்கள் இறங்கி வந்து பார்த்த போது ஆஜர் எதிரி சிமென்ட் கல்லால் என் அப்பாவின் தலையில் போட்டுவிட்டார். வாய் மீதும் கல்லால் போட்டுவிட்டார். அவர் கல்லை போட்டுவிட்டு ஊருகுள் ஓடிவிட்டார். 108 ஆம்பூலன்ஸ் மூலம் அத்திமாசேரிபேட்டை அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். அதன் பிறகு மேல்சிகிச்சைக்காக திருத்தணி அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றோம், அங்கிருந்து திருப்பதி ரமாதேவி மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். ரமாதேவி மருத்துவமனையில் ஒரு நாள் முழுவதும் மருத்துவ சிகிச்சை அளித்தும், முடியாமல் போக 3ம் நாள் 03.05.2019 மாலை 6.30 மணி அளவில் இறந்துவிட்டார். இந்த சம்பவம் சம்மந்தமாக 02.05.2019 காலை 8.00 மணிக்கு பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில்

புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். 04.05.2019ம் மாலை ரமாதேதி மருத்துவமனையிலிருந்து பிரேத்தை திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர மருத்துவகல்லூரியில் பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார். அப்போது என் தந்தை சித்தூர் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக ஓய்வு பெற்றார். அவருடைய ஓய்வூதியம் மூலம் தான் குடும்பத்தை நடத்தி வந்தோம். எனது அப்பாவின் முதல் மனைவி மகன்களான சிரஞ்ஜிவி–க்கு வீடு கட்டிக்கொடுத்தார். ஆஜர் எதிரியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என கூறிவந்தார். இந்நிலையில் ஆஜர் எதிரி தனியாக சென்றுவிட்டார். சொத்து கேட்டும், பணம் கேட்டும் என் அப்பாவிடம் தகராறு செய்து வந்தார். நீ திருமணம் செய்து கொள் நான் பணம் தருவதாக கூறிவந்தார். இதனால் தகராறு ஏற்பட்டு என் அப்பா துங்கும்போது அவர் தலையில் கல்லை போட்டுவிட்டார். இதை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.10.15 09:52:04 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 50/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 15.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வனிதா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | செங்கல்ராயன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பள்ளிப்பட்டில் உள்ள கரலம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் முதல் மனைவியின் மகன் ஆவார். மே 1ம் தேதி வருடம் சரியாக தெரியவில்லை அன்று இரவு நான், எனது மகன், மகள் எங்கள் வீடு மாடியில் படுத்து கொண்டிருந்தோம், எனது கணவர் வீட்டிற்கு வெளியில் படுத்து கொண்டிருந்தார். அப்போது சத்தம் கேட்டு நாங்கள் மாடியிலிருந்து வந்த போது ஆஜர் எதிரி எனது கணவரை சிமெண்ட் கல்லால் முகத்தை குத்திக்கொண்டிருந்தார். அன்று இரவு எனது கணவரை கொலை செய்ய போவதாக அஜய் என்ற நபர் கூறியால் அந்த தம்பி இந்த விபரத்தை கூறினார். அவர் கூறிய போது தான் தெரிந்தது இவன் தான் கல்லால் குத்திவிட்டு சென்றுள்ளார் என தெரியவந்தது. அதன் பிறகு ஆம்பூலன்ஸ் மூலம் திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். திருத்தணியிலிருந்து சென்னை பொது அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன் பிறகு திருப்பதி ரமாதேவி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை பலன் இன்றி மே 3ம் தேதி மாலை 6.30 மணிக்கு இறந்துவிட்டார். போலிசார் விசாரணை செய்தார்கள் இந்த விபரத்தை தான் போலிசிடம் சொன்னேன். என் கணவர் மகன் சிரஞ்ஜிவி வீடு கட்டிக்கொடுத்தார். இவருக்கு திருமணம் செய்து

கொள்ள சொல்லியும் அவர் மறுத்து வந்தார். பணம் கேட்டு சண்டை போடுவார். அதனால் அவரை கொலை செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.10.15 09:52:14 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.